# ‘வெற்றிப் பயணம் தொடரும்!’ முதல்வர் பெருமிதம்!

**… முதல் பக்கத் தொடர்ச்சி!**

சில முக்கிய கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு வழங்கப்படும் ‘பேக்கேஜ்’களுக்கு இணையாக உள்ளது.

இந்த ஆண்டு, தளவாடங்கள், வங்கி, காப்பீடு, சுகாதாரம், விருந் தோம்பல் மற்றும் சுற்றுலா உள் ளிட்ட துறைகளைச் சேர்ந்த பல நிறுவனங்கள் வேலை வாய்ப்பு இயக்கத்தில் பங்கேற்கின்றன. பல குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவ னங்களும் வேலை வாய்ப்பு இயக் கத்தில் ஆர்வத்தை வெளிப்படுத்தி யுள்ளன.

**மேலும் சில நிறுவனங்கள்**

இந்த ஆண்டு பங்குபெறு ம் நிறுவனங்களின் எண்ணிக்கை குறித்த வினாவிற்கு, திருமதி திவ்யா கூறியதாவது: “இது ஒரு தொடர்ச்சியானசெயல்முறையாகும். சில நிறுவனங்கள் ஏற்கனவே குழு வில் வந்துவிட்டன, வரும் வாரங்க ளில் மேலும் சில சேரும்.

கிருஷ்ணகிரியில் நடந்த வேலை வாய்ப்பு இயக்கத்தில், 2,999 பேர் பதிவு செய்திருந்தனர். இதில் 1,591 பேர் நேர்காண லுக்கு வந்திருந்தனர். சுமார் 580 விண்ணப்ப தாரர்கள்/சுய விவரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மேலும் 461சுயவிவரங்கள் இரண் டாவது சுற்றுக்கு தேர்வு செய்யப்பட் டன. இங்கு வழங்கப்படும் அதிக பட்ச தொகுப்பு ஆண்டுக்கு ரூ.3.35 லட்சம்.

சேலத்தில், 3,243 மாணவர் கள் பதிவு செய்திருந்தனர்; நேர்கா ணலில் 1,145 பேர் கலந்து கொண் டனர். மொத்தம் 425 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, இடத்திலேயே சலுகைகள் வழங்கப்பட்டன. இங்கு ஆண்டுக்கு ரூ.2.4 லட்சம் பேக்கேஜ் அதிகமாக இருந்தது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்திலும் சில சலுகைகள் வழங்கப்பட்டன. வேலை வாய்ப்பு இயக்கத்தில் மொத்தம் 24 நிறுவனங்கள் பங் கேற்றன, மேலும் 967 விண்ணப் பதாரர் களுக்கு இடத்திலேயே சலு கைகள் வழங்கப்பட்டன. அதிகபட்சமாக ஆண்டுக்கு ரூ.3 லட்சம் வழங்கப்பட்டது. கள்ளக் குறிச்சியில் வேலை வாய்ப்புக்காக 3,129 பேர் பதிவு செய்துள்ளதாக வும், 1,701 பேர் பங்கேற்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரியலூர் வேலை வாய்ப்பு இயக்ககத்தில், நேர்காணல் நாளில் 1,990 பேர் பதிவு செய்து 561 பேர் வந்திருந்தனர். சுமார் 50 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர், 426 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**முதல்வரின் சமூக வலைதளப் பதிவு**

கழக அரசின் இந்த சாதனைத் திட்டம் படைத்துள்ள புரட்சிகர விளைவுகளை ‘தி இந்து’ ஆங்கில ஏடு செய்தியாக்கி வெளியிட்டுள்ளது கண்டு மகிழ்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளி யிட்ட, ‘எக்ஸ்’ வலைதளப் பதிவு வருமாறு:-

**மனநிறைவு தரும் செய்தி!**

**இந்த வெற்றிப் பயணம் தொடரும்...**

**தலைமுறைகள் பல முன் னேற்றம் காண முதல் தலைமுறைப் பட்டதாரிகள் அனைவரும் நல்ல வேலைக்குச் செல்ல வேண்டும் என் பதே நமது ‘திராவிட மாடல்’ அரசின் நோக்கம்! நமது திட்டங்களால் அந்த நோக்கத்தை நிறை வேற்றுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலைதளப் பதிவிட்டுள்ளார்கள்.





கழக இளைஞர் அணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வி.ஜி.ஆர். மணிவண்ணன் ஏற்பாட்டில், புதுக்கோட்டை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஆர்.ஆர்.சாமிநாதன் முன்னிலையில் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை யேற்று ஆதனக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி சிறப்பித்தார்கள். நிகழ்வில் கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர்–சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தோழர் எம்.சின்னத்துரை, மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.எஸ்.கருப்பையன் மற்றும் ஏராளமான கிளைக்கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## திருப்பூர் மாவட்டத்தில்

# 448 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.43.57 கோடி மதிப்பில் கடனுதவி!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர், பிப்.11-

திருப்பூர் மாவட்டம், பல்லடம் நகராட்சி, சாய் மஹாலில் 08.02.2024 வியா ழக்கிழமை அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கழக மகளிர் அணி துணை செய லாளர் என்.கயல்விழி செல் வராஜ் ஆகியோர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர் விழி தலைமையில், திருப் பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வடக்கு மாநகர கழக செய லாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநக ராட்சி ஆணையாளர் பவன் குமார் ஜி.கிரியப்பனவர் ஆகியோர் முன்னிலையில் 448 மகளிர் சுய உதவிக்கு ழுக்களுக்கு ரூ.43.57 கோடி மதிப்பீட்டில் கடனுதவி களை வழங்கினர்.

அமைச்சர் மு.பெ.சாமி நாதன் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மகளிர் நலனுக்காக பல்வேறு திட் டங்களை அறிவித்து சிறப் பாக செயல்படுத்தி வருகி றார்கள். எந்தவொரு திட்ட மானாலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம், திருப்பூர் மாவட்டம், பல்லடம் நக ராட்சி, சாய் மஹாலில் 448 மகளிர் சுய உதவிக்குழுக்க ளுக்கு ரூ.43.57 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகள் வழங்கப்படுகிறது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் உலக அளவில் மக ளிருக்கான ஒரு அமைப்பை உருவாக்கி அவர்கள் தங்க ளுடைய பொருளாதா ரத்தை மேம்படுத்தி சொந்த காலில் நிற்பதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்கினார் கள். அதனைத் தொடர்ந்து இன்றைக்கு பல லட்சம் மக ளிர் சுய உதவிக்குழுக்கள் உருவாகி மகளிர் சொந்த மாக ஊதுபத்திகள் தயாரித் தல், சேலைகள் தயாரித்தல், கால்நடைகளை வைத்து பால் பண்ணைகள் உரு வாக்குதல் போன்ற தொழில்கள் செய்து தனது செந்தகாலில் நிற்கும் அள விற்கு உயர்ந்துள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுய உத விக்குழுக்களை உள்ளாட் சித்துறையுடன் இணைத்து கின்னஸ் சாதனையில் இடம் பெறும் அளவிற்கு தமிழ்நாடு முழுவதும் சுழல் நிதியை அளித்து சிறப்பாக செயல்படுத்தி வருகி றார்கள்.

திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு மாநில வாழ்வா தாரம் இயக்கத்தின் மூலம் மகளிர் ஊரக உதவி குழுக் களுக்கு 2021-2022 ஆண் டுக்கு ஊரக சுய பகுதிகளில் 5967 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.311.34 கோடியும் நகர்ப்புற பகுதிக ளுக்கு 790 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.250.30 கோடியும் 2022-23 ஆண்டு ஊரக பகுதியில் 6972 மக ளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.407.10 கோடியும் நகரப் பகுதிகளில் 3355 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.180.45 கோடியும் நடப்பு ஆண்டு 2023-24ஆம் ஆண் டுக்கு ஊரக பகுதிகளில் 5432 குழுக்கள் ரூ.249.34 கோடியும் நகரப் பகுதிக ளில் 4494 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.228.95 கோடியும் ஆக மொத்தம் ரூ.478.29 கோடியும் வங்கி கடன் இணைப்பு வழங்க சாதனை எய்தப் பட்டுள்ளது. ரூ.478.29 கோடியில் தற்சமயம் ரூ.43.37 கோடிக்கு இன்று வழங்கப்படுகிறது. மேலும், மகளிர் சுய உதவி க்குழுக்க ளுக்கு மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனம் ஒரு நபருக்கு ரூ.3.20 இலட்சம் மதிப்பில் 3 நபர்களுக்கு ரூ.9.60 இலட் சம் மதிப்பில் வழங்கப்பட வுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சி மகளி ருக்கான ஆட்சியாக நடை பெற்று வருகிறது. தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகக்கட் டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பணிபுரியும் மக ளிர், உயர்கல்வி பயிலும் மாணவியர் பயணம் செய்ய மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி, மகளிர் சுய உதவி குழு கடன்கள் தள்ளு படி, நகைக்கடன் தள்ளு படி போன்ற எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து மாண்புமிகு தமிழ்நாடு முத லமைச்சர் அவர்கள் செயல் படுத்தி வருகிறார்கள்.

பெண்களின் வேலை பங் கேற்பு விகிதத்தை அதிகரிப் பது பொருளாதாரத்தின் வளர்ச்சியை மேம்படுத்தும். பெண்களுக்கு அவர்களின் உயர் கல்வித் தேவைகளை எளிதாக்குவதற்கும் பொரு ளாதார ரீதியாக பங்களிப்ப தற்கும் பொதுப் போக்குவ ரத்தில் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பான பயணங்கள் வழங்கப்படும், இது அவர்களின் சமூக பொருளாதார நிலை மற்றும் பொருளாதாரத்தின் வளர்ச் சியை மேம்படுத்தும் அரசின் சிறந்த திட்டமாகும். புது மைப்பெண் என்கிற திட் டத்தை துவக்கி வைத்தார் கள். தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாண விகளின் உயர்கல்வி சேர்க் கையினை அதி கரிக்கும் பொருட்டு அரசு பள்ளிக ளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற் படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு/பட்டயப் படிப்பு/பட்டப்படிப்பு/ தொழிற்கல்வி ஆகியவற்றில் இடை நிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000/ அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு கலை ஞர் மகளிர் உரிமைத்திட் டத்தின் கீழ் மகளிருக்கு மாதம் ரூ.1,000 என்கிற மகத்தான திட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்டத்தில் 3,96,301 மகளிர் வங்கி கணக்கிற்கு கலைஞர் மகளிர் உரிமை வழங்கி வரு வது வரை மகளிருக்காக பல் வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள் என்று அமைச்சர் தெரிவித்தார்.

## முத்துப்பேட்டை ஒன்றியக்கழக

# அவைத்தலைவர் நா.முத்துராமலிங்கம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி



திருவாரூர், பிப்.11-

முத்துப்பேட்டை ஒன்றிய அவைத்தலைவர் நா.முத்து ராமலிங்கம் அவர்கள் வயது மூப்பின் காரணமாக மறை வெய்தினார் என்பதை அறி விக்க வருந்து கிறோம். அன் னாருக்கு வயது 74.

மறைந்த நா.முத்துராம லிங்கம் அவர்கள் கழகத்தின் ஆரம்ப கால உறுப்பினர் ஆவார். இவர் மிசா கொடு மையிலும், மொழி போராட் டத்திலும் பங்கேற்று சிறை வாசம் எய்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மறைந்த முத்துராம லிங்கம் அவர்களுக்கு கலை யரசி என்கிற மனைவியும், தமிழழகன் என்கிற மகனும், கனிமொழி என்கிற மகளும் உள்ளனர். தமிழழகன் முன் னாள் முத்துப்பேட்டை ஒன் றிய இளைஞரணி அமைப் பாளர் ஆவார்.

அன்னாரின் மறைவின் செய்தி அறிந்த மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், முன்னாள் அமைச் சர் தாட்கோ தலைவர் உ. மதிவாணன், ஒன்றிய செய லாளர் இரா.மனோகரன், நகர செயலாளர் எம்.எஸ். கார்த்திக், தலைமைச் செயற் குழு உறுப்பினர்கள் ப. ஆட லரசன், ஆர்.எஸ் பாண்டி யன், பேரூராட்சி தலைவர் மும்தாஜ் நவாஸ்கான், மாவட்ட விவசாய தொழி லாளர் அணி அமைப்பாளர் குன்னலூர் அன்பழகன் உள் ளிட்ட கழக நிர்வாகிகளும், கழக தோழர்களும் மறைந்த முத்துராமலிங்கம் அவர்க ளுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.





சேலம் மாநகராட்சி, கோட்டை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நேற்று முன்தினம் (09.02.2024) நடைபெற்ற தேசிய குடற்புழு நீக்க நாள் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தொடங்கி வைத்து மாணவிகளுக்கு குடற்புழு நீக்கும் மாத்திரைகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சி மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உடன் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், அஸ்தம்பட்டி மண்டலக்குழுத் தலைவர் திருமதி.செ.உமாராணி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## நாகை - மயிலாடுதுறை மாவட்டங்களில்

# உவர்நீர் மீன் வளர்ப்புத் திட்டத்திற்கு நிதி அளிக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் செ.இராமலிங்கம் கேள்வி!



புதுடெல்லி, பிப். 11-

நாகை - மயிலாடுதுறை மாவட்டங்களில் உவர்நீர் மீன் வளர்ப்புத் திட்டத் திற்கு நிதி அளிக்கப்பட்டுள் ளதா? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்களவையில் மீன் வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத் துறைய மைச்சருக்கு மயிலாடுதுறை மக்களவைத் தொகுதி உறுப் பினர் எஸ்.இராமலிங்கம் பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) திட்டத்தின் கீழ், நிதி ஒதுக் கீடு பற்றி எழுப்பிய வினா வருமாறு: -

(அ) பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) திட்டத்தின் கீழ், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங் களில் உள்ள மீன்/இறால் விவசாயிகளுக்கு, தேவை அடிப்படையிலான உவர் நீர் குஞ்சு பொரிப்பகங்களை நிறுவுதல் மற்றும் உவர்நீர் மீன் வளர்ப்பு/உப்புநீர்/ காரத்தன்மை நீருக்கான புதிய குளங்கள் கட்டுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒன்றிய அமைச்சகம் நிதி உதவி அளித்துள்ளதா? அப்படியானால், கடந்த ஐந்து ஆண்டுகளில் மற்றும் நடப்பு ஆண்டில் அதன் விவரங்கள் மற்றும் இல்லை யென்றால், அதற்கான காரணங்கள்;

(ஆ) பால்வள மேம்பாட் டுக்கான தேசியத் திட்டம், ராஷ்ட்ரிய கோகுல் மிஷன், பால் பதப்படுத்துதல் மற் றும் உள்கட்டமைப்பு மேம் பாட்டு நிதி, பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா மற்றும் மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்ட மைப்பு மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் கீழ் தமிழ் நாடு மாநிலத்திலிருந்து பெறப்பட்ட முன்மொழிவு களின் எண்ணிக்கை மற்றும் விவரங்கள்;

(இ) அரசாங்கத்திடம் இருந்து முதன்மை ஒப்புதல் பெற்ற முன்மொழிவுகளின் எண்ணிக்கை மற்றும் அதன் அடுத்தடுத்த முன்னேற்றங் கள் என்ன?

இதற்கு (மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர்) ஸ்ரீ பர்ஷோத்தம் ருபாலா, 06-02-24 அன்று கீழ்க்கண்ட பதிலை அளித் துள்ளார்.

அது வருமாறு:-

(அ) இந்திய அரசின் மீன் வளத் துறையானது, “பிர தான் மந்திரி மத்ஸ்ய சம் பதா யோஜனா (PMMSY) என்ற முதன்மைத் திட் டத்தை, இதுவரை இல்லாத வகையில் 2020-21 நிதி யாண்டு முதல் 5 ஆண்டுக ளுக்கு அனைத்து மாநிலங் கள்/யூனியன் பிரதேசங் களில் (UTs)ரூ.2005 கோடி முதலீட்டில் செயல்படுத்தி வருகிறது. PMMSY இன் கீழ், தமிழ்நாடு மாநில அரசிடமி ருந்து பெறப்பட்ட திட்ட முன்மொழிவுகளின் அடிப் படையில், இந்திய அரசின் மீன்வளத் துறை, 2020-21 முதல் இன்று வரை மொத் தம் ரூ.934.23 கோடி செல வில் மத்தியப் பங்கான ரூ.376.91 கோடியுடன் நிர் வாக ஒப்புதல் அளித்துள் ளது. இதில் தேவை அடிப் படையிலான புதிய ஓட்டுடலி மீன் (Shell fish) மற்றும் துடுப்பு உவர் மீன்(Finfish) குஞ்சு பொரிப் பகங்கள், உவர் நீர் மீன் வளர்ப்புக்காக புதிய குளங் கள் அமைத்தல், உவர் நீர் மீன் வளர்ப்பிற்கான உள் ளீடுகள், உவர் நீர்/உப்பு/ காரப் பகுதிகளுக்கு உள் ளீடுகள் உட்பட உயிர்க் கூழ்மம் (பயோஃப்ளோக்) குளங்கள் அமைத்தல் போன்ற செயல்பாடுகளும் அடங்கும். தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளபடி மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங் களில் தேவை அடிப்படை யிலான உவர் நீர் குஞ்சு பொரிப்பகங்களை நிறுவு தல் மற்றும் உவர் நீர் மீன் வளர்ப்பு! உவர்நீர்/ காரத் தன்மைக்கான புதிய குளங் கள் கட்டுவதற்கான நடவ டிக்கைகள் விவரங்கள் இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ): இந்திய அரசாங்கத்தின் கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளத் துறை (DAHD), உள் நாட்டுப் பசு இனங்களின் மேம்பாடு மற்றும் பாது காப்பு, மாடுகளின் எண்ணிக் கையை மரபணு ரீதியாக மேம்படுத்துதல் மற்றும் பாலை மேம்படுத்துதல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு 2014 முதல் ராஷ்ட்ரிய கோகுல் மிஷனை செயல்படுத்தி வருகிறது. மாடுகளின் உற்பத்தி மற் றும் பால் உற்பத்தித்திறன் அதன் மூலம் தமிழ்நாடு உட்பட நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் உள்ள விவசாயிகளுக்கு பால் உற்பத்தியை பெருக்கி அதிக லாபம் ஈட்ட வழி வகுக்கிறது. ராஷ்ட்ரிய கோகுல் மிஷனின் கீழ் மாநி லத்திலிருந்து DAHD ஆல் முன்மொழிவு பெறப்பட்ட மொத்தம் ரூ.12992.29 லட் சம் செலவில் 12 திட்டங் களுக்கு ஒப்புதல் அளித்து அரசுக்கு தகவல் அனுப்பப் பட்டுள்ளது. அங்கீகரிக்கப் பட்ட திட்டங்களின் விவ ரங்கள் இணைப்புII இல் கொடுக்கப்பட்டுள்ளன.

DAHD ஆல் செயல்படுத் தப்படும் “பால்வள மேம் பாட்டுக்கான தேசிய திட் டம் (NPDD)” திட்டத்தின் கீழ், 9 திட்டங்கள் தமிழகத் திற்கு பெறப்பட்டு, மொத்த திட்ட மதிப்பான ரூ.25922.50 லட்சத்தில் மத் திய அரசாங்கத்தின் ரூ.18210.30 லட்சம் பங்கு டன் இதுவரை, ரூ. தமிழகத் திற்கு 13642.395 லட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது, அதில் ரூ.12024.193 லட்சம் பயன்படுத்தப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட திட் டங்களின் விவரங்கள் இணைப்புIII இல் கொடுக் கப்பட்டுள்ளன. DAHD ஆல் செயல்படுத்தப்பட்ட “பால் பதப்படுத்துதல் மற்றும் உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி” திட்டத்தின் கீழ், 30.11.2023 வரை, மொத்த திட்டச் செலவு ரூ. 285.82 கோடியில் (கடன் கூறு ரூ. 228.65 கோடி) உள்பட, 4 திட்டங்கள் தமிழ்நாட்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் பதில ளித்தார்.

## நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு விழுப்புரம் வருகை!

# பெரம்பலூர் மாவட்டத்தினர் கோரிக்கை மனுக்கள் வழங்கிடுவீர்!

## மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் அறிக்கை!



பெரம்பலூர்,பிப்,11-

பெரம்பலூர் மாவட் டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் விடுத் துள்ள அறிக்கை வருமாறு,

கழகத் தலைவர், முதல மைச்சர் அவர்களால், நாடாளுமன்ற தேர்தலுக் காக தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனி மொழி கருணாநிதி எம்.பி, தலைமையில் தேர்தல் அறிக்கை குழு அமைக்கப் பட்டுள்ளது.

இந்த குழுவில் தி.மு.க. தலைமை கழக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன், விவசாய அணிச் செயலாளர் ஏ. கே.எஸ்.விஜயன், சொத்து பாதுகாப்பு குழு செயலா ளர் அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் அமைச் சர் டி.ஆர்.பி. ராஜா, அரசு தலைமை கொறடா கோவை செழியன், எம். எல்.ஏ., கே.ஆர்.என். ராஜேஷ்குமார் எம்.பி., மாணவர் அணிச் செயலா ளர் சி.வி.எம்.பி. எழிலர சன், எம்.எல்.ஏ.,

அயலக அணிச் செயலா ளர் எம்.எம். அப்துல்லா, எம்.பி., மருத்துவர் அணிச் செயலாளர் எழிலன் நாக நாதன், எம்.எல்.ஏ., சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த குழுவினர் தமிழ் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு தேர்தல் அறிக்கை தயாரிப் பதில் ஈடுபட்டு வருகின்ற னர். அதன்படி வருகின்ற பிப்ரவரி 17ஆம் தேதி காலை 9 மணிக்கு விழுப்பு ரத்தில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் தேர் தல் அறிக்கை குழு தயா ரிப்பு குழுவினர் வருகை புரிந்து, பல்வேறு தரப்பி னரை சந்தித்து தேர்தல் அறிக்கையில் இடம் பெற வேண்டிய திட்டங்கள் குறித்த கோரிக்கை மனுக் களை பெற உள்ளனர்.

எனவே பெரம்பலூர் மாவட்டத்திற்குட்பட்ட விவசாயிகள், சிறு, குறு தொழில் முனைவோர்கள், புலம்பெயர்ந்த தொழிலா ளர்கள், மாணவர் சங்கங் கள், வியாபாரிகள், கல்வி யாளர்கள், தொழில் துறையினர், வணிகர் சங் கங்கள், மருத்துவர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் ஊழியர்கள், பொதுமக் கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு தங்களது கருத் துக்களை மனுக்களாக வழங்கிட வேண்டும் என பெரம்பலூர் மாவட்ட கழகம் சார்பாக கேட் டுக்கொள்கிறேன். இவ் வாறு குன்னம் சி.இரா ஜேந்திரன் தனது அறிக்கையில் தெரிவித் துள்ளார்.





மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியம் எடுத்துக்கட்டி ஊராட்சியில் கட்டப்பட்ட புதிய பயணிகள் நிழற்குடையை மயிலாடுதறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் திறந்து வைத்தார். உடன் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.அப்துல்மாலிக், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டலப் பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், செம்பனார்கோயில் ஒன்றியக் குழு துணைத்தலைவர் பாஸ்கர், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் முத்துராஜா மற்றும் பலர் உள்ளனர்.